OS.No.:31/2017

நாள் : 02.02.2024

வா.சா. :1

பெயர் :ராஜீவ் காந்தி

குறுக்கு விசாரணை(5,7 பிரதிவாதிகள் தரப்பில்)

நான் முதுநிலை கணினி அறிவியல் பட்டபிரிவு படித்துள்ளேன். சென்னையில் தனியார் துறையில் வேலை பார்த்து வருகிறேன். ராஜகோபால் நாயுடு மற்றும் மீராபாய் எனது தந்தைவழிமுறையில் தாத்தா, பாட்டி ஆவார்கள். ராஜகோபால் நாயுடுவின் 2 வது மகன் என் தந்தை என்றால் சரிதான். ராஜகோபால் நாயுடுவின் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை காணாமல்போனார் உயிருடன் உள்ளாரா இல்லையா என்று எனக்கு தெரியாது. என் தந்தை 1963 ஆம் ஆண்டு பிறந்தார். காணாமல் போனது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. என் தந்தைக்கு 1984 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. என் தந்தை விவசாயம் செய்து வந்தார். 1 வது இலக்க சொத்து என் தாத்தா பெயரில் அவரால் கிரையம் பெறப்பட்ட சொத்து என்றால் சரிதான். 2 வது இலக்க சொத்து என் பாட்டி மீராபாயால் சுயர்ஜிதமாக அவர் பெயரில் கிரையம் பெறப்பட்ட தனிசொத்து என்றால் சரியல்ல. அவர் பெயரில் கிரைய ஆவணம் உள்ளது என்றால் சரிதான். 2 வது இலக்க சொத்து விவரம் என்னால் வழக்குரையில் தவறாக கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராது 1ம் இலக்க சொத்தை ராஜகோபால் நாயுடுக்கு வேறு சில சொத்துக்களும் இருந்தது என்றால் சரிதான். அவர் இறக்கும் வரை சொத்துக்கள் அவரது பராமரிப்பில் இருந்து வந்தது என்றால் சரிதான். ராஜகோபால் நாயுடு இறக்கும் முன்பு விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துபோனார் என்றால் சரியல்ல. ராஜகோபால் நாயுடுவின் 1 வது இலக்க சொத்தை தவிர வேறு எந்த சொத்தையும் இவ்வழக்கில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 20.08.1982 ம் தேதியிட்ட ராஜகோபாலின் உயில் ஆவணம் இருக்கும் விவரம் எங்களுக்கு எப்போது தெரியும் என்றால் 20 வருடங்களுக்கு முன்பு தெரியும். (மேற்கண்ட கேள்விகள் குறித்து

எதிர்வழக்குரையில் இல்லாத நிலையில் குறுக்கு விசாரணை செய்யபடுவதாகவும், வழக்கிற்கு அவசியமற்ற தகவல் என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டது.) எனது வழக்கில் மேற்படி உயில் ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றுதான் கூறியுள்ளேன். ஆனால் அந்த உயிலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராஜகோபால் நாயுடுவின் உயில் ஆவணத்தில் 2 வது இலக்க சொத்து பற்றி கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்குரையில் கூறியுள்ளது போல் உயில் நடைமுறைக்கு வரவில்லை என்று தனியே வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் அதை கூறியுள்ளேன். அசல் உயில் ஆவணம் எங்கள் வசம்தான் உள்ளது என்றால் சரியல்ல. அதனால் தான் அதன் அசலை தாக்கல் செய்யாமல் நடைமுறைக்கு வரவில்லை என்று தச்சு செய்கிறோம் என்றால் சரியல்ல. உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், அவ்வாறு நடைமுறைக்கு வந்ததால்தான் வீராசாமி அவருக்கு கிடைத்த சொத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 13.03.1998 ம் தேதியில் ஏற்பட்ட குடும்ப ஏற்பாடு ஆவணத்தில் உள்ள ஏ முதல் இ வரையிலான பட்டியல் சொத்துக்கள் என்ற விவரம் பின்னிட்டு ஏற்பட்ட 05.10.2002 ஆவணத்தில் கூறப்படவில்லை என்றால் சரியல்ல. அது ஏ முதல் இ வரை என்ற சொத்துக்களை 1,2,3 என வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. ராஜகோபால் நாயுடுவின் பூர்வீக சொத்துக்கள் எவைஎவை அவற்றிலிருந்து ஆண்டுதோறும் கிடைத்த மிகையான வருமானம் எவ்வளவு அதனைக்கொண்டு என்ன என்ன சொத்துக்கள் வாங்கப்பட்டது என்ற விவரம் எதையும் நான் குறிப்பாக வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். வீராசாமி மற்றும் ராஜமன்னார் பெயரில் பொதுகுடும்ப வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று நான் கூறும் வாதத்திற்கு ஆதரவாக மேற்படி நபர்கள் பெயரில் வாங்கப்பட்ட அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ராஜமன்னார் இறந்தபின்னர், ராஜகோபால் காணாமல் போன பின்னர் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பட்டது என்றால் சரிதான். ஏனென்றால் அதன்பின்னர்தான் எங்களது உரிமையை பிரதிவாதிகள் மறுத்து வருகிறார்கள். நான் தவறான முறையில் பாகம் பெறுவதற்காக உயில் ஆவணம் நடைமுறைக்கு

வரவில்லை என்றும், உற்பத்தி செய்யப்பட்ட 05.10.2002 ஆவணத்தை கொண்டு அறிவிப்பு அனுப்பி பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராஜகோபால் நாயுடு எழுதி வைத்த உயில் நடைமுறைக்கு வந்துவிட்டது என்றும், அதன் அடிப்படையிலேயே தரப்பினர்கள் அவரவருக்கு கிடைத்த சொத்தை தனித்து அனுபவித்து உரிமை மாற்றங்கள் செய்துள்ளார்கள் என்றும், நான் தற்போது வேண்டுமென்றே உயில் நடைமுறைக்கு வரவில்லை என்று பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி இறந்துபோனார். அவர் இறந்த தேதி ஞாபகம் இல்லை. இவ்வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.